Pallikalvitn.blogspot.com

# முதல் பருவத் தேர்வு

Pallikalvimaterial.blogspot.com

ஆறாம் வகுப்பு | தமிழ் | காலம் : 2-30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 60)

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 X 1 = 10

1. தாய் மொழியில் படித்தால் ------ அடையலாம்.
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
2. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் ------.
   அ) பாரதிதாசன் ஆ) இளங்கோவடிகள் இ) திருவள்ளுவர் ஈ) பாரதியார்
3. வெண்மை+குடை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) வெண்மை குடை ஆ) வெம்குடை இ) வெம்மை குடை ஈ) வெண்குடை
4. ஆழக்கடல் என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) ஆழமான+கடல் ஆ) ஆழ்+கடல் இ) ஆழ+கடல் ஈ) ஆழம்+கடல்

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

5. கனிச்சாறு என்னும் நூலை இயற்றியவர் ------.
6. உலகிலேயே நெடுந்தொலைவு பயணம் செய்யும் பறவை ------.

இ) பொருத்துக.

7. திங்கள் - மருந்து
8. திருக்குறள் - சவுதி அரேபியா
9. ஔடதம் - உலகப்பொதுமறை
10. சோபியா - நிலவு

ஈ) ஓரிரு சொற்களில் விடையளி. (ஏதேனும் ஐந்து மட்டும்) 5 X 2 = 10

11. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
12. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?
13. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
14. சங்க இலக்கியங்கள் யாவை?
15. ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?
16. முதல் எழுத்துகள் யாவை?
17. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து எது?

உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்று மட்டும்) 3 X 4 = 12

18. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
19. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
20. அஃறிணை என்னும் சொல்லின் சிறப்பினை எழுதுக.

Pallikalvitn.blogspot.com Pallikalvimaterial.blogspot.com

21. [illegible] பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புவதன் காரணம் என்ன?

22. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தாழி என்று பெருஞ்சித்திரனார் கூறுவதன் காரணம் என்ன?

ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிமாறாமல் எழுதுக. 4 + 2 = 6

23. 'மாமழை' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

24. 'அன்பிலார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 10 X 1= 10

25. உயிர்க்குறில் எழுத்துகளை வட்டமிடுக : அம்மா, இரவு, ஈட்டி, ஒன்பது, ஐவர்

26. குறிஞ்சி - இச்சொல்லுக்கு உரிய மாத்திரை அளவு யாது?

27. முதலெழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துக்கு என்னவென்று பெயர்?

28. மெய்யெழுத்துகளின் எண்ணிக்கையைத் தமிழ் எண்களில் எழுதுக.

29. பிறமொழிச் சொற்களை தமிழாக்கம் செய்க:

பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

30. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:

விண், தமிழ், மீன், மொழி

31. பொருத்தமான சொல்லைக்கொண்டு நிரப்புக:

மரங்களை வளர்த்து ------ யைக் காப்போம். (செயற்கை/இயற்கை)

32. பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.

அ) புள் என்பதன் வேறு பெயர் ☐☐☐

ஆ) கடல் என்பதன் வேறு பெயர் ☐☐☐

33. வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.

மிகப்பெரிய சாண்டியகோ மீனைப் பிடித்தார்.

34. கலந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக.

அ) விகண்லம் - ☐☐☐☐☐

ஆ) அவிறில்ய - ☐☐☐☐☐

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1X 6 = 6

35. கிழவனும் கடலும் கூறும் கதையைச் சுருக்கி எழுதுக.

36. ஒளி பிறந்தது கதையின் மூலம் நீ அறிந்ததை சுருக்கி எழுதுக.

ஐ) கடிதம் / கட்டுரை எழுதுக. 1 X 6 = 6

37. விடுப்பு விண்ணப்பம் எழுதுக. (அல்லது)

எதிர்கால கனவு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

Pallikalvi